ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2147/71 - 2019 ඔක්තෝබර් මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.10.31

*2147/71 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974* ஆம் ஆண்டின் *02* ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், *92* ஆம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் குண்டசாலை - ஹாரகம நீர் வழங்கல் திட்டத்தின் மடுல்கெலே சேவை நீர்த்தாங்கி மற்றும் உட்பிரவேசிக்கும் பாதையை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்றை கையகப்படுத்தத் தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,<br>
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,<br>
இலக்கம் *35*, புதிய பாராளுமன்ற வீதி,<br>
பெலவத்தை,<br>
பத்தரமுல்லை,<br>
*2019*, ஒற்றோபர் *24*.<br>
*5/ 2/ 1/ 1524*.

1A – G 31393 – 61 (2019/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், பன்வில பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 731, மடுல்கெலே கிராம அலுவலர் பிரிவில், மடுல்கெலே கிராமத்தில் அமைந்த "மடுல்கெலே பெருந்தோட்டம் (கீழ்ப்பிரிவு)" எனும் பெயருடைய காணியில் கீழ்க்குறிப்பிடப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 01 றூட் 08 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டு.*

*காணியின் பெயர் : மடுல்கெலே பெருந்தோட்டம் (கீழ்ப்பிரிவு)*
*காணியின் விஸ்தீரணம் : 01 றூட் 08 பேர்ச்சஸ்*

***காணியின் எல்லைகள் :***

*வடக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி (பிரிவு (புல) இலக்கம் 14) மற்றும் மடுல்கெலே - கபரகல வீதி ;*
*கிழக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி (பிரிவு (புல) இலக்கம் 14) மற்றும் மடுல்கெலே - கபரகல வீதி ;*
*தெற்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உரிய நீர்த்தாங்கி அமைந்துள்ள காணி மற்றும் இந்தக் காணியின் எஞ்சிய பகுதி (பிரிவு (புல) இலக்கம் 14) ;*
*மேற்கு : எஞ்சிய பகுதி (பிரிவு (புல) இலக்கம் 14).*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

*1. இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,
இலக்கம் : 21, பி. சீ. சீ. வளாகம்,
மீராணியா வீதி,
கொழும்பு 12.*

*2. உடபுஸ்ஸல்லாவ பெருந்தோட்டம் (பிளான்டேசன்) (பீ.எல்.சி),
இலக்கம் : 1/95, நம்பபான,
இங்கிரிய.*

*11-1124*

---

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொலன்னறுவை கழிவு நீர் சேகரிக்கும் மற்றும் வெளியேற்றும் திட்டத்தின் கீழ், பம்பிக்கும் நிலையம் இலக்கம் 04 ஐ நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஒற்றோபர் 24.
5/2/1/1522.*

**அட்டவணை**

*வடமத்திய மாகாணத்தின் பொலன்னறுவை மாவட்டத்தில், தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 183, கதுருவெல மேற்கு கிராம அலுவலர் பிரிவில், கதுருவெல கிராமத்தில் அமைந்த கீழ்க்குறிப்பிடப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 10 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டு.*

**காணியின் எல்லைகள் :**

*வடக்கு : கைவிடப்பட்டிருக்கும் கட்டிடம் உட்பட இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;*
*கிழக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;*
*தெற்கு : வரிப்பண (மதிப்பீட்டு) இலக்கம் 399 இற்கு உரிய கட்டிடம் ;*
*மேற்கு : தனியார் பாதை.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : உரிமையாளரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.*

*11-1125*

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் குண்டசாலை - ஹாரகம நீர் வழங்கல் திட்டத்தின் தெகல்தொருவ சேவை நீர்த்தாங்கி மற்றும் நீர் பம்பிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக, மாற்றுக் காணித்துண்டுகளை கையகப்படுத்தத் தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2019, ஒற்றோபர் 24.*
*5/2/1/1523.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 659, தீகிரிமடவல கிராம அலுவலர் பிரிவில், யக்கஹபிட்டிய கிராமத்தில் அமைந்த, உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. டீ. எம். ஜயரத்ன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 1038 ஐக் கொண்ட நில அளவையாளர் வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 04 மற்றும் 05 இனால்*

குறிப்பிடப்பட்டுள்ள "அதிகாரம் வத்த" எனும் பெயருடைய காணியின் முழு அளவில் 01 றூட் 36.39 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட கீழ்க்காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டுகள் இரண்டு.

காணித்துண்டு இலக்கம் : 04
காணியின் விஸ்தீரணம் : 12.02 பேர்ச்சஸ்

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : வீதி (பிரதேச சபை) மற்றும் இந்த வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 03 இற்கு உரிய காணி ;
கிழக்கு : நெல்லிகஹ கொட்டுவ ;
தெற்கு : நெல்லிகஹ கொட்டுவ மற்றும் இந்த வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 05 இற்கு உரிய காணி ;
மேற்கு : வீதி (பிரதேச சபை) மற்றும் வடிகால்.

காணித்துண்டு இலக்கம் : 05
காணியின் விஸ்தீரணம் : 1 றூட் 24.37 பேர்ச்சஸ்

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : வீதி (பிரதேச சபை) மற்றும் இந்த வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 04 இற்கு உரிய காணி ;
கிழக்கு : இந்த வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 07 (வடிகால்) மற்றும் நெல்லிகஹ கொட்டுவ ;
தெற்கு : திரு. திலகரத்ன மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் அதிகாரம் வத்த மற்றும் இந்த வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 06 (வடிகால்) ;
மேற்கு : திரு. திலகரத்ன மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் அதிகாரம் வத்த மற்றும் இந்த வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 06 (வடிகால்) மற்றும் இலக்கம் 1637 ஐக் கொண்ட உத்தரவுபெற்ற நில அளவையாளர் அளந்து தயாரிக்கப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 1-G இற்கு உரிய காணி.

*காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயர்களும் முகவரிகளும் :*

1. திரு. ஈ. எம். கமல் தேசப்பிரிய ஏக்கநாயக்க,
இலக்கம் 66/2, கொடகன்தெனிய,
பேராதனை.

2. திரு. தேமுனி பிரசான் சன்ஜய டி சில்வா,
"பிரசான்", கம்மெத்தேகொட,
ரத்கம.

3. திரு. ஜீ. ஜீ. ஜயசிங்க,
இலக்கம் 22/1, வரகாகொட,
பிலிமதலாவ.

11-1126

---

## திருத்தம்

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.03.21 ஆந் திகதிய 2063/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின்

இலக்கம் 2A ஆம் பக்கத்தில் 04-197 ஆம் இலக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் அட்டவணையில் காணியின் எல்லைகள் கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பிரகாரம் திருத்தப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

1. காணித்துண்டு இலக்கம் : 01
காணியின் விஸ்தீரணம் : 07 பேர்ச்சஸ்

வடக்கு : இலக்கம் 320301 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட காணித்துண்டு இலக்கம் 50 இன் எஞ்சிய பகுதி மற்றும் காணித்துண்டு இலக்கம் 53 (வீதி) ;
கிழக்கு : குருதெனிய - தம்பவெல வீதி, காணித்துண்டு இலக்கம் 53 (வீதி) மற்றும் காணித்துண்டு இலக்கம் 49 (வீதி) ;
தெற்கு : இலக்கம் 320301 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 49 (வீதி) ;
மேற்கு : இலக்கம் 320301 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட காணித்துண்டு இலக்கம் 51.

2. காணித்துண்டு இலக்கம் : 02
காணியின் விஸ்தீரணம் : 13.3 பேர்ச்சஸ்

வடக்கு : இலக்கம் 320301 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 53 (வீதி) ;
கிழக்கு : இலக்கம் 320301 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட காணித்துண்டு இலக்கம் 50 ;
தெற்கு : இலக்கம் 320301 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 49 (வீதி) ;
மேற்கு : இலக்கம் 320301 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட காணித்துண்டு இலக்கம் 52.

3. காணித்துண்டு இலக்கம் : 03
காணியின் விஸ்தீரணம் : 14.6 பேர்ச்சஸ்

வடக்கு : இலக்கம் 320301 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 53 (வீதி) ;
கிழக்கு : இலக்கம் 320301 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட காணித்துண்டு இலக்கம் 51 மற்றும் காணித்துண்டு இலக்கம் 49 (வீதி) ;
தெற்கு : இலக்கம் 320301 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 56 ;
மேற்கு : இலக்கம் 320301 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 55 மற்றும் 53 (வீதி).

4. காணித்துண்டு இலக்கம் : 04
காணியின் விஸ்தீரணம் : 07 பேர்ச்சஸ்

வடக்கு : கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 320301 இற்கு உரிய காணித்துண்டு இலக்கம் 50 மற்றும் 51 ;
கிழக்கு : பிரதேச சபை வீதி மற்றும் காணித்துண்டு இலக்கம் 53 (வீதி) ;
தெற்கு : கடத்திரல் வரைபடத்தின் இலக்கம் 320301 இற்கு உரிய காணித்துண்டு இலக்கம் 47, 48 மற்றும் 56 ;
மேற்கு : கடத்திரல் வரைபடத்தின் இலக்கம் 320301 இற்கு உரிய காணித்துண்டு இலக்கம் 52.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஒற்றோபர் 24.
5/ 2/ 1/ 1302.

11-1127

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.